<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 177/2015

இன்று 2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 3 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : நித்தியானந்தம்

தந்தை பெயர் : சுப்பிரமணியம்

வயது : 32

<u>முதல் விசாரணை</u>

3 ம் வாதி ஆஜர். பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதிகள் மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 3 ம் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

18.51959 – துரைசாமி வகையறாவிற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும்.

16.9.2004 – பிரதிவாதி கே.எஸ்.ராஜி பெயரிலுள்ள கிரயப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3–2–2015 – பட்டா எண் 2261 க்குரிய சிட்டா கணினி நகல், பட்டா எண் 1194 க்குரிய சிட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

3–2–2015 – சர்வே எண் 136/2, 136/3 க்குரிய அ பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய கால அவகாசம் கோரியதால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–K.R.Kannan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.